www.tamilarangam.net

தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers of Tamil Eelam

# தமிழீழ மண்மீட்பு நிதி

**விடுதலைப்போராட்டத்தில் பங்களித்த மக்கள் அனைவரும் மாமனிதர்களே!**

எமது மக்கள் போற்றப்படவேண்டியவர்கள்; கௌரவிக்கப்படவேண்டியவர்கள். தேசியப் போராட்டத்தில் எமது மக்களின் பங்களிப்பு சாதாரணமானதல்ல; அவர்களது பங்களிப்பு அளப்பரியது என்றுதான் சொல்வேன். இலைமறை காயாக இருந்து விடுதலைப்போராட்டத்திற்கு தோள் கொடுத்து வரும் எமது எண்ணற்ற ஆதரவாளர்களையும் அனுதாபிகளையும் மனவுறுதி படைத்த மாமனிதர்கள் என்றுதான் அழைக்க வேண்டும்.



நீண்டகாலமாகவே போராட்டத்தின் பெரும் பளுவைப் பொதுமக்களே சுமந்து வருகிறார்கள். சாவும், அழிவும், பசியும், பட்டினியும், இரத்தமும், கண்ணீருமாக எமது மக்கள் எதிர்கொண்ட தாங்கொணாத் துன்பத்தைச் சொற்களில் சித்தரிக்க முடியாது

உலகில் எல்லா விடுதலைப் போராட்டங்களிலும் ஒடுக்குமுறையின் நெருப்பில் குளிப்பது பொதுசனங்களே. ஏனென்றால் அடக்குமுறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தை விட பொதுமக்களின் ஆன்மீக உறுதியை உடைக்க வேண்டும் என்பதில்தான் அதிக அக்கறை காட்டுகிறார்கள். ஆனால் இந்த முயற்சிகள் ஒரு போதும் வெற்றியளிப்பதில்லை.

மக்களின் விடுதலை உணர்வை அடக்குமுறையால் அழித்துவிட முடியாது. உலக வரலாறு பகரும் உண்மை இது. ஏனென்றால் விடுதலை உணர்வே மனித ஆன்மாவின் சாரமாக உயிர்மூச்சாக இயங்குகிறது. மனித வரலாற்றை இயக்கும் மகத்தான சக்தியும் அதுவே.

தேசியத் தலைவர் திரு.வே. பிரபாகரன்

## அன்பான பிரான்ஸ் வாழ் தமிழீழ மக்களே!

விடுதலை வரலாறு தன்னை தமிழினத்தின் பக்கமாகத் திருப்பிக் கொண்டிருக்கும் முக்கியமான காலகட்டத்தில் உங்கள் இல்லங்களை நாம் உரிமையுடன் நாடி வருகின்றோம்.

தமிழீழ மண்ணில் சிங்களப் பேரினவாதம் நாளும் பொழுதும் நிகழ்த்திவரும் வர்ணிக்கமுடியாத இன அழிப்பு வேலைகளை அறிந்து, உணர்வால், உயிரால், உடன்பிறந்த பாசத்தால் உலகெங்கும் பரந்து வாழும் தமிழினமே துடிதுடித்து நிற்கின்றது. எம்மின மானங்காக்க, இனவாதப் பேயைத் துரத்தியடிக்க, தினம் தினம் எமது மாவீரர்கள் விலைமதிப்பில்லாத உயிர்களைக் கொடுத்துக் களமாடிவரும் செய்திகளையும் சிங்கள இராணுவப் பயங்கரவாதிகளை பொருத்தமான முறையில் எதிர்கொண்டு உயிர்நாடிகளைக் கொய்தெடுத்து பலத்த தர்ம அடிகளை வழங்கி வருவதையும் நீங்கள் அறிவீர்கள்.

நம் தேசத்தின் மீது தளராத பற்றுக்கொண்ட தமிழீழ மக்களே! நடைபெறும் யுத்தமொன்றை நிறுத்த வேண்டுமானால் அதன் பொருட்டு சமாதானத்தை ஏற்படுத்துவது தான் இதுவரை உள்ள உலகமரபு. ஆனால் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக யுத்தமொன்றை நடத்துவதென்பதும்; இதுவரை உலகம் சந்தித்திராத கபடத்தனமான போர் உபாயமாகும். சிங்கள இனவெறி அரசின் இத்தகு கொடிய போரிலிருந்து எமது மக்களைக் காப்பதும், சிங்கள அரசின் அகோர முகத்தை சர்வதேச அரங்கில் தோலுரித்துக் காட்டுவதும் இன்று ஒவ்வொரு தமிழீழக் குடிமகனின் முன்பாகவும் தோன்றியுள்ள வரலாற்றுக் கடமையாகும். இலக்கற்று நடக்கும் சிங்கள அரசின் படைநகர்வுகளும் எந்தத் திசையிலாவது போவோம் அங்கெல்லாம் தமிழரை அழிப்போம் என்றாகிவிட்ட சிங்கள வெறியாட்டங்களின் கெடுதல்களையும் இனியும் நாம் உய்த்துணரத் தவறுதல் கூடாதல்லவா? இன்று எம்முன்னுள்ள தேசியக் கடமையை நாம் சரிவர நிறைவேற்றத் தவறினால் அதுவே எதிரிக்கு பெரும் சாதகமாகிவிடும் என்பதை நாம் மறந்து விடலாகாது.

இதுவே நாம் மிகக் கடுமையாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய தருணமாகும். இந்தளவு பாரிய இராணுவப் படையணி சமாதானத்திற்காகவா எமது மண்ணில் இறங்கியுள்ளது? என்ற கேள்வியை பொறுப்புள்ள எந்தத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்மகனும் நிராகரித்துவிட முடியாது. இன்று சிங்கள அரசு மூன்று முக்கிய தளங்களில் எமக்கெதிராகச் செயற்பட்டு வருவதை இலகுவாக அறிந்து கொள்ள முடியும்.

1) தமிழ் மக்களின் தாயகபூமியை இராணுவரீதியில் ஆக்கிரமிப்பது.
2) இந்த ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தக் கூடிய ஒரு சர்வதேச சூழ்நிலையை உருவாக்குவது
3) தமிழ் மக்களை வாழ்விடங்களில் இருந்து அகற்றி அவர்களை போராட்டத்திலிருந்து அந்நியப்படுத்தி கடைசியில் ஓர் அரைகுறைத் தீர்வுத் திட்டத்தை திணித்து விடுவது.

மேற்கண்ட இலக்குகளை அடைவதற்காக தன்னால் செலவிடக்கூடிய அதிகூடிய தொகையைச் செலவு செய்து போரை நடத்துகிறது சிங்கள அரசு. தமிழினத்தை அழிக்க என்ன விலையும் கொடுக்கத் தயார் நிலையில் நின்றபடி எமது பகைவனானவன் தனது கடைசிப் பெரும் போரை முடுக்கி விட்டிருக்கிறான். பிரச்சார யுக்தியால் சரியான வழிநடத்தலற்ற, குழம்பிப்போன ஒழுக்கக் கேடான சிங்கள இராணுவத்தை தேசபக்தர்களாகவும், உயிர்கொடுத்துப் போராடும் தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகளாகவும் சித்தரித்து உலகின் கண்களைக் குருடாக்கி, செய்தித் தணிக்கை என்னும் இருளில் எமது தேசத்தைத் தள்ளி இன அழிப்பை வேகமாக நடாத்திக் கொண்டிருக்கிறான் எதிரி.

யாழ்ப்பாணத்தை மீட்டுவிட்டோம்! தமிழ் மக்களை விடுவித்து விட்டோம்! யுத்தம் விரைவில் முடிந்துவிடுமென்று கூறி சிங்கள மக்களை தனது பொய்யான பிரச்சாரத்தால் நம்பவைத்தது சிங்கள அரசு. ஆனால் இந்தப் பொய்ப்பிரச்சாரப் போரின் முகமூடியைக் கிழித்து, இவை அனைத்தும் வெறும் மாயைகளே என்பதை உலகிற்கும் சிங்கள இனத்திற்கும் ஒழுங்காக உணர்த்தி வைத்தனர் தமிழீழ விடுதலைப்புலிகள். முல்லைத்தீவு இராணுவ முகாமை சுற்றிவளைத்து முற்றாகத் துடைத்தெறிந்து முல்லை மாவட்டத்தையே எதிரியிடமிருந்து விடுவித்து வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தினர் தமிழீழ விடுதலைப்புலிகள். சூரியக்கதிரின் வெற்றிக்காக கொண்டாடிய சிங்கள இராணுவம் தன்முகத்தில் முல்லைத்தீவில் கரியைப் பூசிக் கொண்டது. இருப்பினும் சிங்கள அரசு தனது செயற்பாடுகளை நிறுத்தவில்லை என்பதை உயர்ந்து வரும் பாதுகாப்புச் செலவீனங்களிலிருந்து தெளிவாக அறிய முடிகின்றது. 1996–இல் 5000 கோடி ரூபாவாக அதிகரித்திருந்த பாதுகாப்புச் செலவீனத்தை 1997–ல் 10,000 கோடி ரூபாவாக உயர்த்தத் திட்டமிட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. எப்படியாவது 75,000 பேரை புதிதாக இராணுவத்தில் சேர்த்துவிடவும் அரசு பெரும் பிரயத்தனம் எடுத்து வருகிறது. இதிலிருந்து நாம் அறியக்கூடிய உண்மை என்ன? தமிழினத்தை அழித்து அடிமை கொண்டு, அடுத்த நூற்றாண்டிலும் சுதந்திரத்திற்குத் தகுதியற்ற இனமாக்கிவிட சிங்கள அரசுகள் முனைகின்றன என்பது தான். அந்த எண்ணத்தை நிறைவேற்றுவதைத் தவிர எந்த ஒரு நீதியான தீர்விற்கும் அவர்கள் முன்வரப் போவதில்லை என்பதையும் நாம் தெளிவாக உணரவேண்டும்.

தளராத உறுதியுடன் எமது தேசியத் தலைவர் போராட்டத்தினை வழிநடாத்தி வருகிறார். எதிரியின் ஆக்கிரமிப்பை முறியடிக்க எழுந்து நிற்கும் தமிழர் படையை பலப்படுத்தும் பணிக்கு வெளிநாடுகளில் வாழும் தமிழ்மக்கள் பெரும் பங்களிப்பு வழங்க வேண்டியது ஒவ்வொரு தமிழக்குடிமகனதும் தேசியக் கடமையாகும்.

தன்மானத்தால் உயர்ந்து, தாயகத்தைக் காத்திட முன்வந்த தமிழீழ மக்களே!

உங்கள் முன்னைய பங்களிப்பால் தமிழீழ மக்களும் போராளிகளும் புதுப்பலம் பெற்றதை உணர்ந்திருப்பீர்கள். முல்லைத்தீவுச் சமரில் சிங்களப் படைகள் பெற்ற தோல்விக்கும், எமக்குக் கிடைத்த பெருவெற்றிக்கும் பிரான்ஸ் வாழ் தமிழீழ மக்களின் பங்களிப்பும் பெருந்துணை புரிந்ததென்ற செய்தி தங்களுக்கெல்லாம் மனநிறைவு தரும் தகவலாக இருக்கும். மேலும் மேலும் நாம் அனைவரும் உறுதியுடன் செய்யும் பங்களிப்பினால் எதிரியை எம்மண்ணிலிருந்து முற்றாக அகற்ற உதவவேண்டும்.

அன்புக்குரியவர்களே!

எதிரி முன்னைவிட இருமடங்கு வேகத்தில் எம் மீது பாயத் திட்டமிட்டுள்ளதை இதுவரை கண்டு கொண்டீர்கள். இதன்பொருட்டே எண்ணற்ற அரிய செயற்திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. அவற்றை சிறப்புடன் நிறைவேற்ற பெருமளவு நிதி தேவைப்படுகின்றது. இதன்பொருட்டும் தமிழீழப் பூமியில் எமது போராளிகளையும் பொதுமக்களையும் பலப்படுத்தும் பொருட்டும் அவசர அவசரமாக நிதிச்சேர்ப்பொன்றினை மேற்கொண்டுள்ளோம். எதிர்வரும் 08.12.96 முதல் 16.01.96 வரை இந்த நிதி சேகரிப்பு நடைபெறும். அத்தருணம் பிரான்ஸ் வாழ் தமிழீழ மக்களனைவரும் ஆயிரம் பிராங்குகளிற்கு குறையாத தொகையினை தங்கள் இனத்தின் விடிவிற்காக வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த நிதி எமது தமிழீழ மண்ணை மீட்டெடுக்கும் பணிக்காகச் சேகரிக்கப்படுவதால் இதற்கு 'தமிழீழ மண்மீட்பு நிதி' என்று பெயரிட்டுள்ளோம். இந்த மண்மீட்பு நிதியில் நாம் ஒவ்வொருவரும் நாமாகவே முன்வந்து இணைந்து கொண்டு எமது உச்சப் பங்களிப்பினை எவ்வளவு தூரம் வழங்குவோமோ அவ்வளவுதூரம் வழங்குதல் வேண்டும். இது உங்கள் கடமை. இதுவே உங்கள் வாழ்வின் மகத்தான பெருமை! இது ஓர் பிள்ளை தனது தாய்க்குப் புரியும் விலைமதிப்பற்ற சேவையைப் போன்றது. தமிழீழ தேசம் மலரும். எம் மண்ணில் சுதந்திரம் பூக்கும். அந்தச் சுதந்திரப் பயிருக்கு நீர் வார்த்து உயிரளித்த பெருமையில் நீங்களும் உங்களை இணைத்துக்கொள்கிறீர்கள்! விடுதலையை விரைவாக்க எமது மக்களின் வாழ்வை மகிழ்விக்க உங்கள் உதவியை நாடி வருகிறோம்.

நன்றி

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.

தமிழீழ விடுதலைப் புலிகள்
பிரெஞ்சுக் பணியகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்